# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு
************

## ஊடக அறிக்கை

### 2022 டிசம்பர் முதலாம் திகதி முதல் G20 அமைப்பின்

### தலைமைத்துவத்தை இந்தியா ஏற்கின்றது

வரலாற்றுச் சிறப்புமிக்க முக்கிய நிகழ்வாக, 2022 டிசம்பர் முதலாம் திகதி முதல் இந்தோனேசியாவிடமிருந்து G20 தலைமைத்துவத்தை இந்தியா உத்தியோகபூர்வமாக ஏற்கின்றது. உலகளவில் அபிவிருத்தியடைந்த மற்றும் அபிவிருத்தியடைந்து வருகின்ற பாரிய இருபது நாடுகளின் அரசாங்கங்கள் இடையிலான அமைப்பான G20, சர்வதேச பொருளாதார ஒத்துழைப்புக்கான முன்னணி அமைப்பாக தன்னை உருவாக்குகின்றமை குறிப்பிடத்தக்கவிடயமாகும்.

2. இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தருணத்தினைக் குறிக்கும் முகமாக ஜி20 தலைமைத்துவத்தில் இந்தியாவின் இலட்சியத்தை விவரித்து பிரதமர் அவர்கள் கட்டுரையொன்றை எழுதியுள்ளார். இந்த கட்டுரை உலகளாவிய ரீதியில் உள்ள பல்வேறு ஊடகங்களிலும் வெளியிடப்பட்டுள்ளது. ஆற்றுப்படுத்துதல், ஐக்கியம் மற்றும் நம்பிக்கை ஆகியவற்றைக்கொண்ட தலைமைத்துவத்தை இந்தியா எதிர்பார்ப்பதாக அந்தக் கட்டுரையில் பிரதமர் மோடி அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

3. ஜி20 இந்திய தலைமைத்துவத்தின் முக்கிய இலக்காக, பொதுமக்களுக்கும் இந்த அமைப்புக்கும் இடையிலான பிணைப்பினை மேலும் நெருக்கமாக்குதல் மற்றும் மக்களுக்கான G20 அமைப்பாக அதனை உருவாக்குதல் ஆகியவை அமைகின்றன. இதனை உணர்ந்து கொள்ளும் வகையில் இந்திய தலைமைத்துவத்தின் ஒரு வருட காலப்பகுதிக்குள் 'ஜன் பஹிதாரி' ஊடாக பல்வேறு நிகழ்வுகளை நடத்தி இதனூடாக பொதுமக்களிடமிருந்து பாரியளவான பங்களிப்பினை பெற்றுக்கொள்வதற்கும் அவர்களின் ஈடுபாட்டினை அதிகரிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

4. இந்திய தலைமைத்துவத்தின் முதலாவது நாளை குறிக்கும் முகமாக பல்வேறு நிகழ்வுகள் திட்டமிடப்பட்டிருந்தன. நாடளாவிய ரீதியில் இருக்கும் 75 பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்களை ஒன்றிணைக்கும் முகமாக மெய்நிகர் மார்க்கமாக பல்கலைக்கழக மாணவர்களை ஒருங்கிணைக்கும் விசேட நிகழ்வு ஒன்று ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. வெளியுறவுத்துறை அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் மற்றும் பிரதமரின் முதன்மைச் செயலர் ஸ்ரீ பி.கே.மிஸ்ரா ஆகியோர் உள்ளிட்ட பிரமுகர்கள் இந்நிகழ்வில் சிறப்புரைகளை வழங்கியிருந்தனர். இந்த நிகழ்வானது G20 செயற்பாடுகளில் இளைஞர்களின் ஈடுபாட்டினை மேம்படுத்தும் நோக்கத்துடன் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். அதுமட்டுமல்லாமல் பல்வேறு பாடசாலைகளிலும் நடத்தப்பட்ட G20 விசேட அமர்வுகள் மூலமாக பாடசாலை மாணவர்களும் இந்த செயற்பாடுகளில் இணைந்து கொண்டிருந்தனர்.

5. மேலும், இச்செயற்பாடுகளில் மக்களின் பங்களிப்பினை மேம்படுத்தும் முகமாக ஜி20 தொடர்பான விசேட நிகழ்வொன்று கோஹிமாவின் நடைபெற்ற ஹார்ன்பில் பண்டிகையில் இடம்பெற்றிருந்தது. குறிப்பாக யுனெஸ்கோவால் உலக பாரம்பரிய

சின்னமாக அங்கீகரிக்கப்பட்ட இடங்கள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கான இடங்கள் விசேட ஒளியமைப்புகளுடன் அலங்கரிக்கப்பட்டிருந்தன. இவ்வாறு ஒளியினால் அலங்கரிக்கப்பட்ட தளங்களுடன் இணைந்த MyGov செல்பி போட்டி ஒன்றும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. அத்துடன் ஒடிசாவின் பூரி கடற்கரையில் இந்தியாவின் ஜி20 தலைமைத்துவத்தின் இலச்சினை பிரபல மணற்சிற்பக் கலைஞர் ஸ்ரீ சுதர்சன் பட்நாயக் அவர்களால் மணற் சிற்பமாக உருவாக்கப்பட்டிருந்தமை இவற்றின் மற்றொரு விசேட அம்சமாகும்.

6. அத்துடன், அண்மையில் பிரதமர் நரேந்திர மோடி அவர்களால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட G20 அமைப்பின் இணையத்தளமானது g20.org ஆக மாற்றமடைந்ததுடன் @g20org என்ற ருவிட்டர் கணக்கு உட்பட G20 அமைப்பின் உத்தியோகபூர்வ சமூக ஊடகங்களை பயன்படுத்தும் அதிகாரமும் முன்னைய தலைமைத்துவத்திடமிருந்து இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

7. ஜி20 தலைமைத்துவத்தின் கருப்பொருளான “வசுதைவ குடும்பகம்” - “ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்” என்பதிலிருந்து உத்வேகம்பெற்று 50க்கும் மேற்பட்ட நகரங்களில் 32 வெவ்வேறு மட்டங்களில் 200க்கும் அதிகமான கூட்டங்களை நடத்தி அதன்மூலமாக G20 மாநாட்டின் பேராளர்கள் மற்றும் விருந்தினர்களுக்கு இந்தியாவின் உயர்வான கலாசாரப் பாரம்பரியங்கள் தொடர்பான பிரத்தியேகமான அனுபவத்தை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(புதுடில்லியில் உள்ள வெளியுறவுத்துறை அமைச்சினால் வெளியிடப்பட்ட ஊடக அறிக்கை மூலமாக இதற்கான உள்ளீடுகள் பெறப்பட்டன)

*************

**கொழும்பு**
**02 டிசம்பர் 2022.**